ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் - 441) Apr (2) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..4

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 261)

விஷ்வக்ஸேந முத்திரை

83. அங்குலீ த்ரிதயேநைவ முஷ்டிம் பத்தா து பூர்வவத்
தர்ஜநீம் த்விகுணீக்ருத்ய த்வங்குஷ்டாக்ரே நியோஜயேத்
84. ப்ரோத்யதோ தக்ஷிணோ பாஹு: சக்ரக்ஷேபே யதோத்யத:
விஷ்வக்ஸேநஸ்ய முத்ரேயம் விச்வபந்தந க்ருந்தநீ

குறிப்பு – இது அனைத்து பந்தங்களையும் நீக்கும் விஷ்வக்ஸேந முத்திரை ஆகும்.

ஆவாஹந முத்திரை

85. கிஞ்சிதாகுஞ்சயேத் ஹஸ்தம் தக்ஷிணம் ஹ்ருதயோபகம்
அங்குஷ்டௌ விரலௌ ஸ்பஷ்டௌ முத்ரா ஹி ஆவாஹநே ஸ்ம்ருதா

குறிப்பு – இது ஆவாஹந முத்திரை ஆகும்.

விஸர்ஜந முத்திரை

86. கட்க தாரா ஸமாகாரௌ விரலாங்குலிகாவுபௌ
அங்குஷ்டௌ தண்டவத் க்ருத்வா முஷ்டிபந்தம் சநை: சநை:
87-1. குர்யாத் கநிஷ்டிகாதிப்யோ முத்ரைஷா ஸ்யாத் விஸர்ஜநே

குறிப்பு – இது விஸர்ஜந முத்திரை ஆகும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 406)

திருவாய்மொழி ஆறாம் பத்து மூன்றாம் திருவாய்மொழி
நல்குரவும் ப்ரவேசம்

வ்யாக்யானம் – " 'இப்படி தாழ நின்றவன் ஸர்வேச்வரனென்கிறார்' என்று பிள்ளான் பணிக்கும்" என்றருளிச்செய்வர். அதாகிறது "யாவையும் யாவரும் பிழையாமல் பிணக்கி" என்று கீழே ப்ரஸ்துதமான ஸர்வேச்வரத்வத்தை அருளிச்செய்கிறார் என்று. "இதிலே ஒருவாசி தோற்ற பட்டரருளிச் செய்வர்" என்று சீயரருளிச் செய்வர். அதாவது "சேரோம்" என்ற அபிஸந்தியைக் குலைத்துத் தம்மைச் சேர விட்டுக் கொண்ட ஆச்சர்யத்தைக் கண்டு விஸ்மிதராகிறாரென்று.

விளக்கம் – கடந்த திருவாய்மொழியில் அவனுடைய நீர்மையைக் குறித்து உரைத்தார். இந்தத் திருவாய்மொழியில் அவனுடைய ஸர்வேச்வரத்தன்மையைக் கூறுகிறார். இது ஏன் என்றால், உயர்ந்த ஒருவனுக்கு அவனுடைய எளிமையே குணமாகும் என்பதால் ஆகும். திருக்குருகைப்பிரான் பிள்ளான், "இவ்விதம் போகு நம்பீ, கழகம் ஏறேல் நம்பீ என்பது போன்று உரைக்கலாம்படி தன்னை எளிமையாகக் கொண்டு நிற்பவன் ஸர்வேச்வரன்" என்பார்; அதாவது, "யாவையும் யாவரும் பிழையாமல் பிணக்கி" என்று கூறப்பட ஸர்வேச்வரத்தன்மையைக் கூறுகிறார். இந்தத் திருவாய்மொழியானது பரத்வத்தைக் குறித்துக் கூறும்படியாக

உள்ளபோதிலும், ஒன்றுக்கொன்று முரணாக உள்ள விஷயங்களைக் குறித்துக் கூறுவதாக அமைந்ததால், “இதில் வேறுபாடு காண்பிக்கும் விதத்தில் அருளிச்செய்தார்” என்று பராசரபட்டர் கூறுவதாக நஞ்சீயர் அருளிச்செய்தார். “சேரோம்” என்று நின்ற தனது எண்ணத்தைத் தகர்த்து தன்னுடன் சேரும்படியாகச் செய்த செயலைக் கண்டு வியக்கிறார். இந்தத் திருவாய்மொழியில் அவனுடைய ஸர்வேச்வரத் தன்மையைக் கூற வந்தார் என்றால், “இரண்டு விபூதிகளுக்கும் நாதன்” என்று கூறுவதே பொருத்தமாக இருந்திருக்கும்; ஆனால் அதனை விடுத்து, “நல்குரவும் செல்வும்” என்பது தொடக்கமாக இந்தத் திருவாய்மொழி முடிய ஒன்றும்கொன்று முரணான பொருள்கள் கொண்டதாக உள்ளது போன்று விபூதியின் தன்மையை ஏன் கூறவேண்டும்? இதற்கு விடை, “சேரமாட்டேன்” என்று ப்ரணய கோபம் கொண்டு நின்றார்; முடிந்து போகவும் தீர்மானித்தார்; அப்படிப்பட்ட நிலையில் தனது சிறப்பான சக்தி மூலமாக, முரண்பட்ட தன்மைகளைக் கொண்டவனாகத் தன்னை வெளிப்படுத்தினான்; அதன் மூலம் இவரும் ஈர்க்கப்பட்டார்; இதனை எண்ணி வியப்புடன் நின்றார்.

வ்யாக்யானம் – சேர விட்டுக் கொண்டபடிதான் அநேகமிறே; முதல் தன்னிலே தம்மையும் அறியாதே அவனையும் அறியாதேயிருக்க, தன் படிகளையறிவித்துக் கூட விட்டுக் கொண்டான்; உள்ளே புகுர நின்று ஸ்வ நிகர்ஷத்தையும் அவனுடைய உத்கர்ஷத்தையும் அநுஸந்தித்து “நாம் அங்குத்தைக்கு அயோக்யர்” என்று அகல, தன் செல்லாமையைக் காட்டிப் பொருந்த விட்டுக் கொண்டான் “வளவேழுல”கிலே. இனி, அவை போலன்றிறே இது; ஒன்றால் பரிஹரிக்கலாமதன்றே. அகலில் குற்றம், அணுகில் குற்றமாயிருப்ப தொன்றிறே! ஜாதி சண்டாளனை நோக்கினால் ப்ராயச்சித்தமுண்டு; ப்ரணயாபராத சண்டாளர்க்கு அதுவுமில்லை.

விளக்கம் – இதற்கு முன்பு ஆழ்வாரை அவன் தன்னுடன் சேரவிடவில்லையோ? அதற்கும் இதற்கும் உள்ள வேறுபாடு என்ன என்பதை அருளிச்செய்கிறார். அவன் சேரவிட்டது பலவிதங்களில் ஆகும். அந்த விதங்களை விளக்கமாக உணர்த்த எண்ணியவராக, அவை அனைத்தைக் காட்டிலும் இதுவே அரிதானது என்கிறார்; “மயர்வற மதிநலம்” என்பதில் ஆழ்வார் தன்னையும் தான் அறியாமல் உள்ளபோதிலும், அவனையும் அறியாமல் உள்ளபோதிலும், தனது விதங்களை

அவன் உணர்த்தி, ஆழ்வாரை அவன் தன்னுடன் சேர்த்துக் கொண்டான். அடுத்து, “வளவேழ் உலகு” என்பதில், அவனுடன் கலக்க எண்ணிய ஆழ்வார், தனது தாழ்வையும் அவனுடைய உயர்வையும் எண்ணியவராக, “நாம் அவனுடன் சேர்வதற்கு யோக்யமானவர் அல்லர்” என்று அகல முனைந்தபோது, அவன் தான் அகல முயலாமல் இருப்பதை உணர்த்தி, தன்னுடன் ஆழ்வாரைச் சேர்த்துக் கொண்டான். இங்குள்ள நிலை அவைகள் போன்றது அல்ல. இதனை எதனாலும் சமாதானம் செய்ய இயலாது. ஏன் என்பதற்கு விடை, முன்பு கூறப்பட்ட இரண்டு இடங்களிலும், ஆழ்வார் தனது ஸ்வரூபத்தை அறியாதவராகவும், தன்னிடம் ஏற்பட்ட மயக்கங்களை அறியாதவராகவும் இருந்ததால், அவனை விட்டு அகன்றார்; ஆனால் அங்கு அவற்றை அவருக்கு உணர்த்தி, அவரைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டான்; இங்கு, ஸர்வேச்வரனுடைய பாவபந்தம் குறித்து கரடுமுரடாக உரைத்து அகன்று சென்றதால், இதனை எந்தக் காரணம் கொண்டும் சமாதானம் செய்ய இயலாது என்று கருத்து. இது “அகன்றாலும் குற்றம், அணுகினாலும் குற்றம்” என்பதாக உள்ளது அல்லவோ? சண்டாளன் ஒருவன் நோக்கினால் ஏற்படும் நிலைக்குக் கூட ப்ராயச்சித்தம் உள்ளது; ஆனால் நாயகனுடைய விஷயத்தில் நாயகி கொள்ளும் ப்ரணய கோபமானது காரணம் இன்றி இருந்தால், ப்ராயச்சித்தம் இல்லை; அதாவது ப்ரணய கோபத்தால் ஏற்பட்ட அபராதத்திற்கு பாபம் ஏற்படுதலே விளைவாகிறது; இதற்கு ப்ராயச்சித்தம் இல்லை.

வ்யாக்யானம் – ஆக, இப்படிகளாலே தன் செல்லாமையைக் காட்டி அவன் பொருந்த விட்டுக் கொண்ட படியைக் கண்டு விஸ்மிதராகிற இவர்க்கு, “இவ்வளவல்லகாணும் நம்முடைய ஆச்சரியங்களிருக்கும்படி; லோகத்தில் தன்னில் தான் சேராத விருத்த பதார்த்தங்களுமெல்லாம் நம்மோடே சேர்ந்திருக்கிறபடி பாரீர்; ஆன பின்பு, நம்மோடு சேராதாரில்லை காணும்!” என்று தன்னுடைய விருத்த விபூதிகத்வத்தைக் காட்டிக் கொடுக்கக் கண்டு, “இது இருந்தபடி என்?” கொடுத்த சைதந்யத்தைக் கொண்டு அகலுகைக்கு உடலாயிருக்கிற இவற்றையெல்லாம் கூட விட்டுக் கொடு நிற்கிற படிகளும், இனி நிமித்தமானது உபாதாநமாக மாட்டாது; உபாதாநமானது நிமித்தமாக மாட்டாது; இங்ஙனேயிருக்க இவையெல்லாம் தானாயிருக்கிறபடியையும் இவற்றோடு கூடியிருக்கச் செய்தேயும் இவற்றில் தோஷங்கள் தனக்கு ஸ்பர்சியாமலிருக்கிற படியையும், தோஷந்தட்டாமல் கடக்க விருக்கையன்றிக்கே நியந்தாவாயிருக்கிற

படியையும், இனி நாட்டில் ப்ராப்யமானது ப்ராபகமாகமாட்டாது; ப்ராபகமானது ப்ராப்யமாகமாட்டாது; இங்ஙனேயிருக்க ப்ராப்ய ப்ராபகங்கள் இரண்டும் தானேயாயிருக்கிறபடியையும், மற்றும் இவனுடைய ஸௌந்தர்ய சீலாதிகளையும் அநுஸந்தித்து, "இப்படி உபகார சீலனான ஸர்வேச்வரன் திருவிண்ணகரிலே வந்து ஸந்நிஹிதனானான். இவனல்லது நமக்கு பரம பந்துக்களில்லை" என்று அறுதியிட்டு, "இவன் திருவடிகளல்லது பற்றில்லை" என்று பேசுகிறாராயிருக்கிறது.

விளக்கம் – "மயர்வற", "வளவேழ்" ஆகிய திருவாய்மொழிகளில் கூறப்பட்ட விதங்களால், தான் இவரை விட்டு அகன்று செல்லாதபடி இருந்த நிலையை ஸர்வேச்வரன் இவருக்கு உணர்த்தி, தன்னுடன் இவரைச் சேர்த்துக் கொண்டதால், மிக்க வியப்பு கொண்டார். அப்படி நின்ற இவரிடம் ஸர்வேச்வரன், "நாம் ஏற்படுத்தும் ஆச்சர்யங்கள் இவை மட்டும் அல்ல. இந்த உலகில் முரண்பட்ட தன்மைகள் கொண்டவையும், ஒன்றுடன் ஒன்று சேராமல் உள்ளவையும் ஆகிய பொருள்கள் அனைத்தும், ஒன்றாக இணைந்து நம்முடன் சேர்ந்து நிற்பதைக் காண்பீராக. ஆகவே நம்முடன் சேராதவர்கள் என்று யாரும் இல்லை", என்று தனது முரண்பட்ட பொருள்கள் நிறைந்துள்ள விபூதித் தன்மையைக் காண்பித்துக் கொடுத்தான். இவற்றைக் கண்ட இவர், "இது போன்று முரணாக வஸ்துக்கள் உள்ள விதம்தான் எத்தகையது?", என்று எண்ணி வியந்தார். இவன் அளித்த அறிவையே காரணமாகக் கொண்டு, இவை அனைத்தும் இவனை விட்டு அகல்வதாக உள்ள நிலையிலும் கூட, அவை அனைத்தையும் தன்னுடன் சேர்த்தபடி நிற்கும் விதங்களையும்; நிமித்தகாரணங்கள் உபாதானக்காரணங்களாக இருக்க முடியாது, உபாதானமானது நிமித்தகாரணமாக இருக்க முடியாது, இப்படி உள்ளபோது இவை அனைத்தும் தானாகவே நின்ற விதத்தையும்; இவை அனைத்துடனும் இவன் சேர்ந்து நின்றாலும், இவற்றின் தோஷங்கள் தன்னைத் தீண்டாமல் உள்ள விதத்தையும்; உலகில் அடையப்பட வேண்டிய வஸ்துவானது தன்னை அடைவதற்கான உபாயமாகத் தானே இருப்பதில்லை, இது போன்று உபாயமாக உள்ள வஸ்துவே அடையப்படவேண்டிய வஸ்து என்றும் இருப்பதில்லை, இங்கு இவனே இவை இரண்டாகவும் நிற்கும் விதத்தையும்; இவனுடைய அழகு, சீலம் போன்றவற்றையும்; இப்படியாகப் பலவற்றையும் எண்ணியவராக, "இப்படியாக உபகாரம் செய்தபடி உள்ள ஸர்வேச்வரன்

திருவிண்ணகரில் வந்து நமக்கு அருகில் நிற்கிறான். இப்படி உள்ளபோது, இவன் அல்லாமல் நமக்கு உயர்ந்த உறவினர்கள் வேறு யாரும் இல்லை" என்று முடிவு செய்தார். தொடர்ந்து, "இவன் திருவடிகள் அல்லாமல் நமக்குப் பற்றுதல் வேறு இல்லை", என்று கூறுகிறார்.

வ்யாக்யானம் – முதல் திருவாய்மொழியிலே பரத்வாநுபவம் பண்ணி, மூன்றாந் திருவாய்மொழியிலே ஸௌலப்யத்தை யநுஸந்தித்து "எத்திறம்" என்று கிடந்தார். இங்கு, "போகு நம்பீ" என்று தள்ளச் செய்தேயும் கால்வாங்கமாட்டாதே நின்ற நீர்மையை அநுஸந்தித்து, அதுக்கு எதிர்த்தட்டான பரத்வத்தை அநுஸந்திக்கிறார்; "மயர்வற மதிநலமருளப்பெற்ற"வரிறே; மேன்மையை அநுஸந்திப்பது நீர்மையை அநுஸந்திப்பதா மத்தனையிறே.

விளக்கம் - முதல் திருவாய்மொழியில் பரத்வத்தை அனுபவித்தார். மூன்றாம் திருவாய்மொழியில் எளிமைத்தன்மையை எண்ணியபடி, "இது எத்தகையது" என்று மயங்கிக் கிடந்தார். இங்கு, "போகு நம்பீ" என்று தள்ளினாலும், அங்கிருந்து அகன்று செல்லாமல் நிற்கும் நீர்மையை எண்ணி, அதற்கு எதிர்த்தட்டாக உள்ள பரத்வத்தை எண்ணுகிறார். "மயர்வற" அருளப்பெற்றவர் அல்லவோ? மேன்மையை எண்ணுதல் என்பது நீர்மையை எண்ணுவதே ஆகும்.

6-3-1 நல்குரவும் செல்வும் நரகும் சுவர்க்கமும் ஆய்
வெல்பகையும் நட்பும் விடமும் அமுதமும் ஆய்
பல்வகையும் பரந்த பெருமான் என்னை ஆள்வானை
செல்வம் மல்கு குடித் திருவிண்ணகர்க் கண்டேனே

பொருள் - வஸ்துகளுடைய சுருங்கின நிலையான தரித்தமும், அவறின் மலர்ந்த ரூபமாக உள்ள ஸம்பத்தும்; துக்கத்தின் இருப்பிடமாக நரகவும், சுகத்தின் இருப்பிடமாக ஸ்வர்க்கமும்; எதிரிகளை காய்க்கவல்ல பகையும், அதற்கு எதிர்த்தட்டாக உள்ள நட்பும்; விஷமும், அமிர்தமும், இப்படியாக பல விதங்களிலும் பரந்த் அனைத்தையும் ஆள்பவனாகிய ஸர்வேச்வரன், தான் இவ்விதம் உள்ல விதத்தை எனக்கு வெளிப்படுத்தி, என்னை அடிமை கொண்டான. இப்படிப்பட்ட அவனை, பகவத் அனுபவம் என்ற செல்வம்

குறையாமல் உள்ல ஸாதுக்களுடைய கூட்டத்தைக்கொண்ட திருவிண்ணகரில் தான் கண்டு கொண்டேன்.

அவதாரிகை – விருத்த விபூதிகனான ஸர்வேச்வரனைத் திருவிண்ணகரிலே காணப் பெற்றேனென்கிறார்.

விளக்கம் – “ஒன்றுக்கொன்று மாறுபட்ட தன்மைகள் கொண்ட வஸ்துக்கள் அனைத்தையும் தனது செல்வமாகக் கொண்ட ஸர்வேச்வரனைத் திருவிண்ணகரில் காணப்பெற்றேன்”, என்கிறார்.

வ்யாக்யானம் - (நல்குரவும் செல்வும்) தாரித்ரியமும், அதுக்கு எதிர்த்தட்டான ஐச்வர்யமும். (நரகும் சுவர்க்கமும்) து:கைகதாநமான நரகமும், ஸுகைகதாநமான ஸ்வர்க்கமும். (வெல் பகையும் நட்பும்) ஸமாதாநத்தாலே மீளுமதன்றியிலே வென்றே விடவேண்டும் பகையும், அதுக்கு எதிர்த்தட்டான உறவும். (விடமும் அமுதமுமாய்) - முடித்தே விடுவதான விஷமும், போனவுயிரை மீட்கவற்றான அம்ருதமுமாய். போனவுயிரை மீட்டுத் தான் போக்யமுமாயிறே அம்ருதமிருப்பது. அநிஷ்டமான தாரித்ர்யாதிகளோடு இஷ்டமான ஐச்வர்யாதிகளோடு வாசியற ததீயத்வாகாரத்தாலே இவர்க்கு உத்தேச்யமாயிருக்குமிறே. “ஆய்” என்றது, ப்ரதிபதம் சேர்த்துக் கொள்வது.

விளக்கம் – (நல்குரவும் செல்வும்) – தரித்ரமும், அதற்கு எதிர்த்தட்டான ஐச்வர்யமும். (நரகும் சுவர்க்கமும்) - துக்கங்களுடைய ஒரே இடமான நரகமும், சுகத்தின் ஒரே இடமான ஸ்வர்க்கமும். (வெல் பகையும் நட்பும்) - சமாதானம் செய்தால் தீர்ந்து போகும் என்று எண்ணாமல், வென்றே தீரவேண்டும் என்பதாக உள்ள பகையும், அதற்கு எதிர்த்தட்டான உறவும். (விடமும் அமுதமுமாய்) - உயிரைப் போக்கக் கூடியதான விஷமும், போன உயிரை மீட்கவல்ல அமிர்தமும். ஆனால் அமிர்தம் இனிமையாக இருக்கும் அல்லாமல் போன உயிரை மீட்டுத் தருமோ என்றால், அமிர்த்ததிற்கு இரண்டு தன்மைகள் உள்ளன. போன உயிரை மீட்டு இனிமையாக உள்ளதாகும். விரும்பக் கூடியதாக உள்ள ஐச்வர்யத்தை, விருப்பம் இல்லாத தரித்ரத்துடன் ஏன் சேர்த்துக் கூறவேண்டும் என்பதற்கு விடை அளிக்கிறார்; விருப்பம் இல்லாத வறுமை போன்றவற்றுடன் தரித்ரமும், எந்தவிதமான

வேறுபாடும் இன்றி அவனுடைய உடைமையாக உள்ளதால், இவருக்கு இலக்காகவே உள்ளது.

வ்யாக்யானம் - (பல்வகையும் பரந்த பெருமான்) ஜ்ஞாநாதிகனான தானுங் கூட விபூதியைப் பேசப்புக்கு "நாஸ்த்யந்தோ விஸ்தாஸ்யமே" என்று இளைத்துக் கைவாங்கினத்தை, இத்தனை ப்ரேமத்தில் கனமுடைய இவர்க்குச் சொல்லப்போகாதிறே. ஆனாலும் சிறிது பேசினாராகவும் வேணுமிறே. வஸ்து தனக்கு விசேஷணத்தையொழிய ப்ரதீதியில்லையிறே; "நிர்விசேஷம் வஸ்து" என்று விசேஷண ரஹிதமாக மாயாவாதம் சொல்லுகிறாரன்றே. அங்ஙனேயாகில், மோக்ஷ சாஸ்த்ரந்தான் வேண்டாவே. வஸ்து ஸத் பாவங் கொள்ளும்போது விசேஷணம் வ்யாவர்த்தகமாயல்லதிராது.

விளக்கம் - (பல்வகையும் பரந்த பெருமான்) - மேலும் சில விபூதிகளைக் கூறாமல், "பல்வகையும் பரந்த" என்று மற்ற அனைத்தையும் ஏன் ஒரே கூட்டமாகக் கூறவேண்டும்? இதற்கு விடை அளிக்கிறார். ஞானத்தின் அதிபதியான ஸர்வேச்வரன், தானே தனது விபூதி முழுவதையும் குறித்து உரைக்க முயன்றால் கூட, கீதை (10-19) - நாஸ்த்யந்தோ விஸ்தாஸ்யமே - எனது விபூதிக்கு எல்லை இல்லை - என்று உரைந்து, பின்வாங்குவதாக உள்ளது; இப்படி உள்ளபோது, மிகுந்த ப்ரேமை கொண்ட இவராலும் இயலாது என்பதால், கூட்டமாகக் கூறுகிறார். சரி, அப்படியானால் தொடக்கத்திலேயே "பலவகையும் பரந்த" என்று கூறாமல், ஒரு சிலவற்றை மட்டும் ஏன் கூறவேண்டும் எனறால், சிறிதாவது உரைத்தார் என்று இருக்கவேண்டும் என்பதால் ஆகும். இவ்விதம் கூறவேண்டுமா என்றால், "நிர்விசேஷம் வஸ்து - வஸ்துவிற்கு எந்தப் பண்புகளும் இல்லை" என்று, பண்புகள் இல்லாதபடி அல்லவோ ப்ரஹ்மத்தை மாயாவதி கூறுகிறார்? நிர்விசேஷம் என்று கூறுவதால் என்ன முரண்பாடு உள்ளது என்பதற்கு விடை அளிக்கிறார்; மோக்ஷ சாஸ்த்ரமானது விசேஷங்களுடன் கூடிய வஸ்துவையே கூறுகிறது அல்லாமல் நிர்விசேஷ வஸ்துவை அல்ல; ஆகவே நிர்விசேஷ வஸ்துவை ப்ரஹ்மம் என்று ஏற்றால், மோக்ஷ சாஸ்த்ரம் வீணாகும்; வஸ்துவின் இருப்பை மட்டுமே கொள்வது என்றானால், மோக்ஷ சாஸ்த்ரம் அவசியம் இல்லை என்றாகிவிடும்.

வ்யாக்யானம் - ஒன்றுக்கொன்று விசேஷணமாம்போது அந்யயோக வ்யவச்சேதம் பண்ணிக் கொண்டல்லது விசேஷணமாகமாட்டாது; இங்கு இவனுக்கு ஸ்வவ்யதிரிக்தங்க ளடங்கலும் விசேஷணமாயிருக்கையாலே அந்யயோக வ்யவச்சேதம் பண்ண வொண்ணாது; ஆனால், விருத்த விசேக்ஷணங்கள் ஏக வ்யக்தியிலே ஸங்கதமாகிறபடி எங்ஙனே? என்னில், அயோக வ்யவச்சேதம் பண்ணிக் கொண்டு ஸங்கதமாகிறது.

விளக்கம் – ஒரு பொருளானது தனது பண்பைக் கொண்டு, மற்றவற்றிலிருந்து பிரித்து அறியப்படுகிறது இப்படியாகப் பண்பை மற்றவற்றிலிருந்து பிரிந்து அறிய உதவியாகக் கொள்ளுதல் என்பதே, ஒரு பொருளின் இருப்பையும் நமக்கு காண்பிக்கிறது; ஆனால் ஒரு பொருளுக்கு இப்படிப்பட்ட இலக்கணம் கூறினால், இது "நல்குரவும்" என்று இடத்திற்குப் பொருந்தாது. இதனை "ஒன்றுக்கொன்று" என்று தொடங்கும் மூன்று வாக்கியங்கள் மூலம் அருளிச்செய்கிறார். [இங்கு இரண்டு கருத்துக்களை அறிய வேண்டும். அந்யயோக வ்யவச்சேதம் மற்றும் அயோக வ்யவச்சேதம் என்பவற்றை அறியவேண்டும். "இராமன் வில்லாளியே" என்று கூறுவது அயோக வ்யவச்சேதம் ஆகும்; இது இராமனுடைய மற்ற பண்புகளுடன் சேர்த்து, அவன் வில்லாளி என்பதை முக்கியமான பண்பாகக் கூறுகிறது. "இராமன் மட்டுமே வில்லாளி" என்பது அந்யயோக வ்யவச்சேநம் ஆகும்; இது இராமன் மட்டுமே வில்லாளி என்று கூறி, மற்ற யாரும் அவ்விதம் இல்லை என்று கூறுகிறது]. "நல்குரவு" என்பதில் முரண்பட்ட பொருள்கள் அவனுடைய பண்புகளாகக் கூறப்பட்டது; இவை ஒன்றுக்கொன்று அந்யயோக வ்யவச்சேத முறையில் தள்ளினால் அல்லாமல், பண்புகள் என்று கூறப்படமாட்டாது. ஆனால் இவனுக்குத் தன்னைத் தவிர உள்ள மற்ற அனைத்து பொருள்களுமே பண்புகளாக உள்ளதால், அந்யயோக வ்யவச்சேதம் கொண்டு எவற்றையும் தள்ள இயலாது. சரி, ஆயினும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வஸ்துக்கள், ஒரே வஸ்துவான இவனிடம் சேர்ந்து நிற்பதாகக் கூறுவது எப்படி என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்; அயோக வ்யவச்சேத முறையில் அவை சேர்ந்தபடி உள்ளன என்று கருத்து.

வ்யாக்யானம் - இவர்தாம் அவனை அநுபவிக்கவாகில் இழிகிறது, இவ்விருத்த விசேஷணங்களைச் சொல்லுகிற இவற்றால் ப்ரயோஜநமென்? என்னில், அவனையுள்ளபடிகண்டு அநுபவிக்கவேணுமே. ராஜபுத்ரனுக்கு ராஜாவினுடைய

போகஸ்த்தாநமான ஓலக்கத்தோடு சிறைக்கூடத்தோடு வாசியற “என் பிதாவினைச்வர்யம்” என்றிருக்குமிறே. இவர் தமக்கு இங்குண்டான அநுஸந்தாநம், முக்தனுக்கு லீலாவிபூத்யநுஸந்தாநம் போலேயிறே. “நோபஜநம் ஸ்மரந்நிதம் சரீரம்” என்னாநிற்கச்செய்தே, முக்தனுக்கு லீலாவிபூதி ததீயத்வாகாரத்தாலே உத்தேச்யமாகா நின்றதிறே; இவர்க்கும் அப்படி முக்தரோடொக்க ததீயத்வாகாரமொழிய ஆகாராந்தர ஸ்ம்ருதி இல்லாதபடி, இங்கேயிருக்கச் செய்தே மயர்வறுத்துக் கொடுத்தான். ஸ்வஸம்பந்தத்தாலே பார்த்தபோது கால்வாங்கியல்லது நிற்கவொண்ணாதபடி த்யாஜ்யமாய்த் தோற்றும்; ஜ்ஞாநாஜ்ஞாநங்களுக்குப் பொதுவான இவ்விருப்பைக் கழித்து, அதுக்குக் கலக்கமில்லாத தேசத்திலே போகையிலே த்வரிக்கக் கடவனிறே.

விளக்கம் – இவர் அவனை அனுபவிக்க மட்டுமே முனைகிறார். இவ்விதம் உள்ளபோது, ஒன்றுக்கொன்று முரண்பட்ட பண்புகளைக் கூறும் இந்த வாக்கியங்களால் என்ன பயன் உள்ளது? இதற்கு விடை அளிக்கிறார். அவனை உள்ளது உள்ளபடி கண்டு அனுபவிக்க வேண்டும் என்பதால் ஆகும். ஒரு ராஜகுமாரனுக்கு, தனது தந்தையின் இனிமையான இடமாகிற அரச சபை மற்றும் சிறைக்கூடம் ஆகிய இரண்டும், “இவை எனது தந்தையின் செல்வம்” என்றுள்ள தன்மையால், எந்தவிதமான வேறுபாடும் இன்றி இருக்கும் அல்லவோ! இங்கு இவருக்கு ஏற்படும் இந்த எண்ணங்கள், முக்தனுக்கு லீலாவிபூதியின் எண்ணம் போன்று உள்ளதாகும். சாந். (8-12-3) – நோபஜநம் ஸ்மரந்நிதம் சரீரம் – முக்தன் தனது முந்தைய சரீரத்தை எண்ணமாட்டான் - என்பதாக உள்ளபோதிலும், முக்தனுக்கு லீலாவிபூதி என்பது, ஸர்வேச்வரனுக்கு வசப்பட்டது என்பதால், இலக்காக இருக்கலாம் அல்லவோ? அதனைப் போன்றே இவருக்கும் முக்தர்கள் போன்று ஸர்வேச்வரனுடைய உடைமை என்பதான சிந்தனை இன்றி வேறு நினைவுகள் தோன்றாதபடியாக, இங்கு உள்ளபோதே, திருவாய்மொழி (1-1-1) – மயர்வற மதிநலம் - என்பதாக அருளிச்செய்தான். ஆனால் திருவிருத்தம் (1) - இந்நின்ற நீர்மை இனி யாம் உறாமை - என்பதாக, இந்த லீலா விபூதியின் ஸம்பந்தமானது கைவிடத்தக்கதாக அல்லவோ இவரே கூறினார்? இதற்கு விடை அளிக்கிறார்; தனது ஸம்பந்தம் காரணமாக இந்த இடத்தை விட்டு அகன்று இங்கு நிற்க இயலாதபடி கைவிட வேண்டியதாகத் தோன்றுகிறது; ஞானம் மற்றும் அஞ்ஞானம் ஆகிய இரண்டிற்கும் பொதுவாக உள்ளதான இந்த இடத்தின்

இருப்பைக் கழித்து, இப்படிப்பட்ட கலக்கங்கள் ஏதும் இல்லாத இடத்திற்கு செல்வற்கு அல்லவோ துடித்தபடி உள்ளார்?

வ்யாக்யானம் - (பல்வகையும் பரந்த பெருமான்) இப்படி விபூதிமுகத்தாலே பலபடியாக விஸ்த்ருதனானவன். (பரந்த பெருமானென்னை யாள்வானை) இந்த வ்யாப்தியெல்லாம் தம்மையகப்படுத்த வென்றிருக்கிறார்; ஒருவனை அகப்படுத்த நினைத்தார் ஊரை வளையுமாபோலே. (செல்வம் மல்கு குடித் திருவிண்ணகர்க் கண்டேனே) மரு பூமியிலே பொய்கை கண்டாப்போலே. (செல்வம் மல்கு குடி) மிக்க ஸம்பத்தையுடைத்தான குடிகளையுடைத்தான திருவிண்ணகர். “லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:” என்னுமாபோலே ஸம்பந்தமொத்திருக்கச்செய்தே கடக்கக் கிடந்த ஸ்ரீபரதாழ்வானைப் போலன்றிக்கே கிட்ட நின்று அடிமை செய்யும் இளையபெருமாளைப்போலே. (திருவிண்ணகர்க் கண்டேனே) “காண வேணும்” என்னுமாசையோடேயிருந்து தேஹாந்தர ப்ராப்தி பண்ணி தேசாந்தரத்திலே போய்க் காண்கையன்றிக்கே, பசித்தவிடத்தே சோறு பெறுமாபோலே ஆசைப்பட்டவிடத்தே அநுபவிக்கப் பெறுகை. “நான் சென்று நாடி நறையூரிற் கண்டேன்” என்னுமாபோலே.

விளக்கம் – (பல்வகையும் பரந்த பெருமான்) - இப்படியாக உள்ள விபூதிகளால் பலவிதங்களிலும் விரிந்தபடி உள்ளவன். (பரந்த பெருமான் என்னை ஆள்வானை) - இப்படியாக இவன் எங்கும் பரவியபடி நின்ற நிலையானது தன்னை அகப்படுத்துவதற்காகவே ஆகும் என்று இவர் உள்ளார். ஆனால் இவர் ஒருவரை அபகரிக்க அனைத்து இடங்களிலும் பரவி நிற்கவேண்டுமோ என்றால், ஒருவனைப் பிடிக்க ஊரையே வளைப்பது போன்றாகும். (செல்வம் மல்கு குடித் திருவிண்ணகர்க் கண்டேனே) – பாலைவனத்திலே பொய்கையைக் கண்டது போன்று. (செல்வம் மல்கு குடி) - மிகுந்த ஸம்பத்துக்கள் நிறைந்தவர்கள் உள்ள ஒப்பிலியப்பன் கோயில். மிகுந்த ஸம்பத்துக்கள் எவை என்றால், பாலகாண்டம் (18-28) - லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந: – லக்ஷ்மணன் கைங்கர்யச் செல்வம் கொண்டவன் - என்பதற்கு ஏற்ப, கைங்கர்யச் செல்வமானது லக்ஷ்மணனுக்கும் பரதனுக்கும் ஒரே போன்று உள்ளபோதிலும், பரதன் போன்று தள்ளி இன்றி, அருகில் இருந்து கைங்கர்யம் செய்யும் லக்ஷ்மணன் போன்று உள்ளவர்கள். (திருவிண்ணகர்க் கண்டேனே) - அவனைக் காணவேண்டும் என்ற ஆசை கொண்டு நின்று, அதற்காக வேறு ஒரு சரீரம் எடுத்து பரமபதத்திற்குச் சென்று காணவேண்டிய அவசியம் இன்றி, பசித்த இடத்திலேயே உணவு கிட்டியது

போன்று, தான் ஆசைப்பட்ட இடத்திலேயே அனுபவிக்கப் பெற்றார். இவ்விதம் விரும்பிய இடத்திற்குச் சென்று அனுபவிக்கப் பெற்றவர்கள் உள்ளனரோ என்றால், பெரிய திருமொழி (6-8-1) - நான் சென்று நாடி நறையூரிற் கண்டேன் – என்பது காண்க.

6-3-2 கண்ட இன்பம் துன்பம் கலக்கங்களும் தேற்றமும் ஆய்
தண்டமும் தண்மையும் தழலும் நிழலும் ஆய்
கண்டு கோடற்கு அரிய பெருமான் என்னை ஆள்வான் ஊர்
தெண் திரைப் புனல் சூழ் திருவிண்ணகர் நல் நகரே

பொருள் - இந்த லோகங்களில் காணப்படும் சுகம் மற்றும் துக்கங்களையும்; துக்கத்தின் காரணமாக ஏற்படும் சித்தத்தின் கலக்கமும், சுகம் காரணமாக சித்தத்தில் உண்டாகும் தெளிவுகளும்; கலக்கம் காரணமாக உண்டாகும் சீற்றமும், சுகம் காரணமாக உண்டாகும் அருளும்; கோபத்திற்கு நிகரான வெப்பம் கொண்ட அக்னியும், அருளுக்கு நிகராக உள்ள நிழலும் என்று இப்படியாக, காண்பதற்கு அரியவனாக உள்ள ஸர்வேச்வரன், என்னை ஆள்வதற்காக என்னை அடிமை கொண்டான்; அவனுடைய ஊரானது தெளிவாகவும், அலைகள் வீசுவதாகவும் உள்ள நீர்வளத்தால் சூழபட்ட திருவிண்ணகரம் என்பதான நல்ல நகரம் ஆகும்.

அவதாரிகை - ஸ்வயத்தத்தாலே ஒருவர்க்கும் காணவொண்ணாத பெருமையை யுடையவனாய் வைத்து என்னை அடிமை கொள்ளுகிறவன் ஊரான திருவிண்ணகர் ஸர்வ விலக்ஷணமென்கிறார்.

விளக்கம் – “தங்களுடைய முயற்சியால் காண்பதற்கு இயலாதவன் என்ற பெருமை கொண்டவனாக உள்ளபோதிலும், என்னை வந்து அடிமையாக ஏற்றுக் கொள்பவனுடைய ஊராகிய திருவிண்ணாகரமானது, அனைத்துவிதங்களிலும் தனித்தன்மை கொண்டது”, என்கிறார்.

வ்யாக்யானம் - (கண்ட இன்பம்) “ஐங்கருவி கண்டவின்பம்” என்னுமாபோலே பரிச்சிந்ந ஸுகம். (துன்பம்) நாம பேத மாத்ரமாய் அத்தோடொத்த து:கம். (கலக்கங்களும் தேற்றமுமாய்) இதர விஷயங்களினுடைய அலாபத்தால் வரும் கலக்கமும் அவற்றினுடைய லாபத்தால் வரும் தேற்றமும். (தண்டமும் தண்மையும்) கோபமும், ப்ரஸாதமும். (தழலும் நிழலுமாய்) உஷ்ணத்தைப் பண்ணக் கடவதான

அக்நியும், சைத்யத்தைப் பண்ணக் கடவதான நிழலுமாய். (கண்டு கோடற்கரிய பெருமான்) இவையெல்லாவற்றாலும் அவனுடைய அபரிச்சேத்யத்தை சொல்லிற்றாயிற்று. இவருடைய ஜ்ஞாந வைசத்யமிருந்தபடி என்தான்! இங்கே சில விசேஷணங்களைச் சொல்லா, கண்டு கோடற்கரிய பெருமானென்னா அவனைச் சொல்லாநின்றார்; கீழே சிலவற்றைச் சொல்லா, "பல்வகையும் பரந்த பெருமான்" என்னாநின்றார்; இதென்ன அநுஸந்தாந க்ரமந்தான்! இவனையொழிந்ததொரு வஸ்துவுக்கு ஸத்பாவமின்றிக்கே யிருக்கிறபடியிறே.

விளக்கம் - (கண்ட இன்பம்) - திருவாய்மொழி (4-9-10) – ஐங்கருவி கண்டவின்பம் - என்பதற்கு ஏற்ப அளவிடக்கூடியதாக உள்ள சுகம். (துன்பம்) - மோக்ஷத்தை விரும்பும் ஒருவனுக்கு சுகமும் துன்பமாகவே இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டவராக, பெயர் மட்டுமே வேறாக உள்ளதாக இருப்பதும், சுகத்திற்கு சமமாகவே உள்ளதும் ஆகிய துக்கம். (கலக்கங்களும் தேற்றமுமாய்) - மற்ற விஷயங்கள் கிடைக்கவில்லை என்பதால் ஏற்படும் கலக்கம், அந்த விஷயங்கள் கிட்டுவதால் ஏற்படும் தெளிவும். (தண்டமும் தண்மையும்) - கோபமும் அருளும். (தழலும் நிழலுமாய்) - உஷ்ணத்தை ஏற்படுத்தவல்ல அக்னியும், குளிர்ச்சியை அளிக்கவல்ல நிழலும். (கண்டு கோடற்கரிய பெருமான்) - இவை அனைத்தின் மூலமும், அளவிட இயலாதபடி உள்ள அவன் தன்மை கூறப்பட்டது. இவருடைய ஞானத்தின் சிறப்பு எத்தகையது! ஞானத்தின் சிறப்பு என்பது, அனைத்தையும் பரப்ரஹ்மமாகவே காண்பதாகும். இங்கு அனைத்துவிதமான தன்மைகளையும் கூறாமல் விட்டதன் காரணத்தை "கண்டு கோடற்கு அரிய பெருமான்" என்றார்; அதன் முன்பு பல சிறப்பான தன்மைகளைக் கூறியதன் காரணத்தை திருவாய்மொழி (6-3-1) – பல்வகையும் பரந்த பெருமான் – என்றார். இது எத்தகைய எண்ணும் விதமோ! இவனைத் தவிர்த்து நிற்கும் எந்த ஒரு வஸ்துவிற்கும் "இருக்கும் பொருள்" என்பது ஏற்படாது.

வ்யாக்யானம் - நல்லாரும் நம்பிஸ்ரீஸேநாபதிதாஸருங் கூடத் திருமலைக்குப் போகாநிற்க, ஸ்ரீஸேநாபதிதாஸர் தண்டையிட்டுத் தூற்றையடிக்க, நல்லார் "அர்த்த காம நிமித்தமான த்வேஷம் இத்தோடின்றிக்கேயிருக்க, நிர்நிபந்தநமாக ஈச்வர விபூதியை நலிவதே!" என்ற வார்த்தையை நினைப்பது. ஸ்வயத்தத்தால் கண்டு கோடற்கரிய ஸர்வேச்வரன்.

விளக்கம் - ஞானிகளுக்கு அனைத்தும் ப்ரஹ்மமயமாகவே வெளிப்படுவதை ஒரு நிகழ்வு மூலம் காண்பிக்கிறார். நல்லார் என்பவரும், நம்பி ஸ்ரீசேநாபதிதாசரும் சேர்ந்து திருமலை சென்றனர். அப்போது சேநாபதிதாசர் ஒரு குச்சியைக் கொண்டு வழியில் இருந்த புதர்களை, வழி ஏற்படுவதற்காக அடித்தார். இதனைக் கண்ட நல்லார், "அர்த்தம் மற்றும் காமம் ஆகியவற்றின் காரணமாக உள்ள கோபமானது இந்தப் புதருடன் நமக்கு ஏதும் இல்லாதபோது, எந்த ஒரு காரணமும் இன்றி, ஈச்வரனுடைய இந்தச் செல்வத்தை ஏன் துன்புறுத்தவேண்டும்", என்றார். கண்டு கொள்வதற்கு அரியவன் என்பது நம்முடைய சொந்த முயற்சியால் இயலாது என்பதைக் கூறியதாகும்.

வ்யாக்யானம் - (என்னையாள்வானூர்) - என்னை இழக்கமாட்டாமல் "மின்னிடை மடவா"ரில் மிறுக்கெல்லாம்பட்டு என்னை அடிமை கொண்டவனூர். (தெண்திரை யித்யாதி) தெளிந்த திரைகளையுடைத்தான புனல்களாலே சூழப்பட்ட திருவிண்ணகராகிற நன்னகர். (தெண்திரைப் புனல்சூழ்) திவ்யநதியான விரஜைக்குப் போலியான ஆறும் உண்டாகப் பெற்றது. அங்கிருக்கிறவன் இங்கே வந்து நின்றால் அங்குள்ளவையெல்லாம் இங்கே உண்டாகத் தட்டில்லையே. (திருவிண்ணகர் நன்னகரே) இவ்வளவில் முகங்காட்டாத ஸ்ரீவைகுண்டமும் ஒரு தேசமாயிற்றதோ? அவன் விரும்பினவிடம் ப்ராப்ய பூமியாமித்தனையிறே.

விளக்கம் - (என்னை ஆள்வான் ஊர்) - என்னை அழிக்க இயலாமல், "மின்னிடை மடவார்" என்பதில் கூறப்பட்டது போன்று படாத பாடுகள் பலவும் பட்டு, என்னைத் தனது அடிமையாகக் கொண்டவனுடைய ஊர். (தெண்திரை இத்யாதி) - தெளிந்த நீரைக் கொண்டதால் தெளிந்த அலைகள் வீசும் புனல்கள் சூழ்ந்து நிற்கும் திருவிண்ணகர். இந்த நகரத்தைப் பரமபதமாக முன்பு கூறியதால், இங்குள்ள ஆறும் விரஜை போன்று உள்ளதை என்பதை "தெண்திரைப் புனல்" என்றார். அதாவது அங்குள்ள விரஜை போன்று இங்குள்ள ஆறும் உள்ளது. ஆனால், இங்குள்ள இடத்தையும் ஆற்றையும் இவ்விதமாக பரமபதம் மற்றும் விரஜை என்று கூறலாமோ என்றால், அங்குள்ளவன் இங்கு வந்து நிற்குபோது, அங்கு உள்ளவை அனைத்தும் இங்கும் இருப்பதில் எந்தக் குறையும் இல்லை அல்லவோ? (திருவிண்ணகர் நன்னகரே) - அல்லது, இங்கு வந்து அவன் திருமுகம் காண்பித்தபடி உள்ளபோது, ஸ்ரீவைகுண்டம் ஒரு நகரம் என்று கூறலாம்படி உள்ளதோ? அவன் விரும்பிய இடம் பரமபதமாகவே இருக்கும் அல்லவோ?

6-3-3. நகரமும் நாடுகளும் ஞானமும் மூடமும் ஆய்
நிகர் இல் சூழ் சுடர் ஆய் இருள் ஆய் நிலன் ஆய் விசும்பு ஆய்
சிகர மாடங்கள் சூழ் திருவிண்ணகர் சேர்ந்த பிரான்
புகர் கொள் கீர்த்தி அல்லால் இல்லை யாவர்க்கும் புண்ணியமே

பொருள் - சிறந்த ஞானம் நிறைந்தவர்கள் நிறைந்துள்ள நகரமும், ஞானம் அற்றவர்கள் நிறைந்துள்ள நாடும்; இவை ஏற்படுவதற்குக் காரணமாக உள்ள ஞானமும் மயக்கமும்; அந்த ஞானம் மற்றும் அறியாமை ஆகியவற்றுடன் ஒப்பு கொண்டவதாகவும், வேறு ஒப்புமை இல்லாததாகவும் உள்ள பரந்த ஒளியும் இருளும்; இருளுக்கு இருப்பிடமான பூமியும், ஒளியின் இருப்பிடமான ஆகாயமும் என்பதாக உள்ளவனும், சிகரங்கள் கொண்ட மாடங்களால் சூழ்ந்த திருவிண்ணகரில் பொருந்தி நிற்பவனும் ஆகிய ஸர்வேச்வரனுமான அவனுடைய ஒளி வீசும் திருக்கல்யாண குணங்கள் அல்லாமல், அனைவருக்கும் கரையேறும் நன்மை வேறு ஏதும் இல்லை.

அவதாரிகை - திருவிண்ணகரப்பனுடைய கல்யாண குணங்களையொழிய வேறு ஒருவர்க்கும் உத்தாரகமில்லை யென்கிறார்.

விளக்கம் – "திருவிண்ணகரில் உள்ள ஒப்பிலியப்பனுடைய திருக்கல்யாண குணங்கள் அல்லாமல், யாருக்கும் கரையேறும் வழி வேறு ஏதும் இல்லை", என்கிறார்.

வ்யாக்யானம் - (நகரமும் நாடுகளும்) போக ப்ரதாநராய் ஸுகித்திருக்கும் நகரத்திலுள்ளார், கர்ஷகராய்க் கொண்டு தேஹயாத்ரை போக்கியிருக்கும் நாட்டிலுள்ளார். அன்றிக்கே, பரிச்சிந்நமாயுள்ளவையும், அபரிச்சிந்நமாயுள்ளவையும் என்றுமாம். (ஞானமும் மூடமுமாய்) பதார்த்த ஸ்வபாவத்தையுள்ளபடி க்ரஹிக்கக் கடவதான ஜ்ஞாநமும், அத்தை விருத்தமாக ப்ரதிபத்தி பண்ணக்கடவதான அஜ்ஞாநமும்.

விளக்கம் – (நகரமும் நாடுகளும்) - ஒன்றுக்கொன்று முரண்பட்ட விஷயங்களை மட்டுமே இங்கு கூறி வரும்போது "நகரமும் நாடும்" என்கிறார். இவற்றுக்கு இடையில் முரண்பாடு உள்ளதோ என்பதற்கு விடை அளிக்கிறார். நகரத்தில்

உள்ளவர்கள் இன்பமே முக்கியம் என்று கொண்டு சுகமாக இருப்பர்; நாட்டில் உள்ளவர்கள் பயிர்த்தொழில் செய்தபடி தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்துவர். அல்லது அளவிற்கு உட்பட்டது மற்றும் அளவிற்கு உட்படாமல் உள்ளது என்றும் கூறலாம். (ஞானமும் மூடமுமாய்) - ஒவ்வொரு வஸ்துவின் இயல்பை உள்ளது உள்ளபடி அறியவல்ல ஞானமும், அந்த இயல்புகளை முரணாக அறிய வைக்கும் அஞ்ஞானமும்.

வ்யாக்யானம் - (நிகரில் சூழ் சுடராயிருளாய்) – உபமாந ரஹிதமாய்க் கொண்டு எங்கும் வ்யாபித்து நிற்கிற தேஜஸ்ஸாய், அதுக்கு எதிர்த்தட்டான அந்தகாரமாய். (நிலனாய் விசும்பாய்) ரூபவதியான பூமியும், அரூபியான ஆகாசமுமாய். கடிநையான பூமியும், அச்சமான ஆகாசமுமாய் என்றுமாம். (சிகரமித்யாதி) பர்வத சிகரங்களைக் கொண்டு வந்து சூழ வைத்தாற்போலேயிருக்கிற மாடங்களாலே சூழப்பட்ட திருவிண்ணகரிலே பொருந்தி நிற்கிற உபகாரகன். (புகர் கொள்கீர்த்தியல்லாலில்லை) பரமபதத்தில் புகழ் மழுங்கியாகாதே கிடப்பது; அங்குள்ளாரில் தன்னிற் குறைந்தாரில்லையே; “மம ஸாதர்ம்யமாகதா:”, “பரமம் ஸாம்யமுபைதி”, “தம்மையேயொக்கவருள் செய்வர்” என்று தன்னோடு ஸாம்யாபந்நராயிறே அங்குள்ளாரிருப்பது. குறைவாளர்க்கு முகங் கொடுத்தாலிறே புகழ் நிறம் பெறுவது? (யாவர்க்கும் புண்ணியமே) “மின்னிடை மடவாரி”லிறாய்த்த நமக்கேயன்றிக்கே ஸர்வர்க்கும் உத்தாரகம் அதுவல்லதில்லை. தாந்தாம் தேடிக் கொள்ளுமவையெல்லாம் கழுத்துக் கட்டியாமத்தனை; “மின்னிடை மடவாரி”ல் அவன் வர, “வேண்டா” என்று முடிந்து போகப் புக்கதிறே; இவன் பார்க்குமுபாயம் இவனுக்கும் கழுத்துக்கட்டியாம்; அவன் காட்டுமுபாயம் அவனுக்கும் காற்கட்டாம்; இதிறே உபாயத்தில் அடிப்பாடு.

விளக்கம் – (நிகரில் சூழ் சுடராயிருளாய்) - உபமானம் இல்லாதபடி எங்கும் வ்யாபித்து நிற்கும் ஒளியாகவும், அதற்கு முரணாக உள்ள இருளும். (நிலனாய் விசும்பாய்) - உருவத்துடன் கூடிய பூமியாகவும், அவ்விதம் இல்லாத ஆகாயமும். அல்லது கடுமையாக உள்ள பூமியும், லேசான ஆகாயமும். (சிகரம் இத்யாதி) - பர்வதத்தின் சிகரங்களைக் கொண்டு வந்து சூழ்ந்து நிற்கும்படி வைத்தது போன்றுள்ள மாடங்களால் சூழப்பட்ட திருவிண்ணகரில் பொருந்தி நிற்கும் உபகாரகன். (புகர் கொள் கீர்த்தியல்லாலில்லை) - “புகர் கொண்ட கீர்த்தி” என்று ஏன் சிறப்பிக்க வேண்டும்? பரமபதத்தில் இவனுடைய புகழானது மழுங்காமல் உள்ளது அல்லவோ? அங்குள்ளவர்களில் இவனை விடக் குறைந்தவர்களும் யாரும்

இல்லை அல்லவோ? கீதையில் (14-2) - மம ஸாதர்ம்யமாகதா: - எனது ஸ்வரூபத்தை அடைந்தவர்கள் – என்று இவனே கூறினான் அல்லவோ? முண்டக உபநிஷத்தில் – பரமம் ஸாம்யமுபைதி – அவனுடைய தன்மைகளில் ஒப்புமை கொண்டவர்கள் - என்று அல்லவோ கூறப்பட்டது? பெரியதிருமொழி (1-3-5) – தம்மையேயொக்கவருள் செய்வர் – என்பதாக இவனுக்குச் சமமாக உள்ளவர்கள் அல்லவோ அங்கு இருக்கிறார்கள்? இப்படி உள்ளபோது இங்குள்ள திருவிண்ணகரில் “புகர் கொள் கீர்த்தி” என்று ஏன் கூறினார்? காரணம், குறைந்த இயல்பு கொண்டவர்களுக்கு முகம் காண்பித்தால் அல்லவோ புகர் கூடும்? (யாவர்க்கும் புண்ணியமே) - “அனைவருக்கும்” என்றது ஏன் என்றால், “மின்னிடை மடவார்” திருவாய்மொழியில் தம்முடன் ஈடுபட்டு நின்றவர்களுக்கும், அது போன்று அங்கு ஈடுபடாமல் இருந்தவர்களுக்கும் என்று கருத்து. அனைவரும் கரையேறுவதற்கு இது அன்றி வேறு வழி ஏதும் இல்லை. அதாவது “யாவர்க்கும் புண்ணியம் இல்லை” என்று படிக்கவேண்டும். ஆனால் வேறு உபாயம் இல்லையோ என்பதற்கு விடை அளிக்கிறார்; தாங்களாகவே தேடிக் கொள்ளும் மற்ற உபாயங்கள் அனைத்தும் தீமையை மட்டுமே விளைவிப்பதாக முடியும். அவ்விதம் அவை உள்ளனவோ என்றால், “மின்னிடை மடவார்” திருவாய்மொழியில் அவன் வர முயன்றபோது, “வேண்டாம்” என்று உரைத்து, முடிந்து போக முயன்றார் அல்லவோ? அவரவர்கள் செய்யும் சொந்த உபாயங்கள் என்பவை தீங்கில் முடியும்; அவன் காண்பிக்கும் உபாயம் என்பது, அவனை நம்மிடம் கட்டி வைக்கும்; அதுவே உபாயத்தின் அடிப்படை கொள்கை ஆகும்.

6-3-4. புண்ணியம் பாவம் புணர்ச்சி பிரிவு என்று இவை ஆய்
எண்ணம் ஆய் மறப்பு ஆய் உண்மை ஆய் இன்மை ஆய் அல்லன் ஆய்
திண்ண மாடங்கள் சூழ் திருவிண்ணகர் சேர்ந்த பிரான்
கண்ணன் இன் அருளே கண்டு கொள்மின்கள் கைதவமே

பொருள் - விருப்பம் நிறைவேறுதல் மற்றும் விருப்பமற்ற கார்யங்கள் நடத்தல் ஆகியவற்றின் காரணமாக உள்ள புண்ணியம் மற்றும் பாபங்கள்; அந்தந்த புண்ணிய பாபங்களுடைய செய்கை காரணமாக அந்தந்த சேர்க்கை மற்றும் பிரிவுகள்; நினைவுகளும் மறதியும்; அந்தந்த வஸ்துக்களுடைய உண்மையாக உள்ள நிலை மற்றும் இல்லை என்பதான நிலை என்ற பலவாகவும், அந்தந்த கர்மங்களால் வசப்படாதபடியும் உள்ளவன்; உறுதியான மாடங்கள் சூழ்ந்து நிற்கும்

திருவிண்ணகரில் நிற்பவன்; இப்படிப்பட்ட க்ருஷ்ணனுடைய எல்லையற்ற இனிமை கொண்டதான, மற்ற பயனை கருதாமல் இருக்கும் நிலைக்கு ஏற்றதான க்ருபையை மட்டுமே வழியாகக் கண்டு கொள்ளுங்கள்.

அவதாரிகை - புண்யபாபாதியாய் எம்பெருமானுக்கு விசேஷணத்வேந தோற்றுகிற விபூதியெல்லாம் அவன் க்ருபையாலே உண்டாயிற்று என்கிறார்.

விளக்கம் – "புண்ணியம் மற்றும் பாபம் போன்றவை தொடக்கமாக உள்ளவைகளும், ஸர்வேச்வரனுக்கு விசேஷமாகத் தோன்றுபவைகளும் ஆகிய அனைத்து விபூதிகளும், அவனுடைய க்ருபையால் தோன்றுகின்றன" என்று கூறுகிறார்.

வ்யாக்யானம் - (புண்ணியம் பாவம்) ஸுக ஸாதநமான புண்யம், து:க ஸாதநமான பாபம். (புணர்ச்சி பிரிவு) புண்ய பலமான ஸம்ஶ்லேஷம், பாப பலமான விச்லேஷம். (எண்ணமாய் மறப்பாய்) அபிமத விஷயத்தில் ஸ்ம்ருதி. அநபிமத விஷயத்தில் விஸ்ம்ருதி. (உண்மையாயின்மையாய்) அஸ்தி சப்த வாச்யமுமாய், நாஸ்தி சப்த வாச்யமுமாய். ஸத்பாவாஸத்பாவமென்னுதல். சேதநாசேதங்களென்னுதல். (அல்லனாய்) புண்ய பாபாதிகளுக்கு நியாமகனாய், அவற்றுக்கு வச்யனன்றிக்கே யிருக்குமென்கிறது.

விளக்கம் – (புண்ணியம் பாவம்) - சுகத்தை அடைய வைப்பதான புண்ணியம், துக்கத்தை ஏற்படுத்துவதான பாபம். (புணர்ச்சி பிரிவு) - புண்ணியத்தின் பலனாகிய சேர்க்கை, பாபத்தின் பலனாகிய பிரிவு. (எண்ணமாய் மறப்பாய்) - விருப்பமான விஷயங்களைக் குறித்த நினைவுகள், விருப்பம் அல்லாத விஷயங்களைக் குறித்து மறதி. (உண்மைய் இன்மையாய்) - "உள்ளது" என்ற சொல்லின் பொருளும், "இல்லை" என்ற சொல்லின் பொருளுமாக உள்ள வஸ்துக்கள். ஸத் என்றும், அஸத் என்றும் கூறப்படுபவை. சேதந அசேதநங்கள் என்றும் கூறப்படுபவை. (அல்லனாய்) - புண்ணியம் மற்றும் பாபம் ஆகியவற்றை நியமிப்பவனாக உள்ளபோதிலும், அவற்றுக்கு வசப்படாதபடி உள்ளவன்.

வ்யாக்யானம் - (திண்ணமித்யாதி) "வாஸுதேவ க்ருஹம்த்வேகம் நப்லாவயதி ஸாகர:" என்கிறபடியே, ப்ரளய காலத்துக்கும் அழியாதபடி திண்ணிதான

மாடங்களாலே சூழப்பட்ட திருவிண்ணகரிலே சேர்ந்து நிற்கிற உபகாரகனான க்ருஷ்ணன். (இன்னருளே) புண்ய பாபாதிகளாய்க் கொண்டு அவனுக்கு விபூதியாய்த் தோற்றுகிறவையெல்லாம் அவனுடைய க்ருபையாலே உண்டாயிற்று. பாபமும் அவன் க்ருபையாலேயோ என்னில்? அதுவும் அப்படியே; சேதநனுடைய பூர்வ கர்மாநுகுணமாக ப்ரவர்த்திப்பிக்கையினாலே அதுவும் அவன் க்ருபையாலேயாமத்தனை. எல்லாம் செய்தாலும், தீமை அவன் க்ருபையாலே வரக்கூடுமோ என்னில், தீயத்தைக் காட்டி வெதுப்பி நல்வழி போக்குகையினாலே கூடுமிறே. (இன்னருள்) நிர்ஹேதுக விஷயீகாரம். (கை தவமே) நான் சொல்லுகிற இதில் அர்த்தவாதமில்லை. (கண்டு கொண்மின்கள்) நீங்களும் எல்லாங் கண்டு கொள்ளுங்கோள்; அன்றிக்கே, (கைதவமே) க்ருதகமென்றபடியாய், பண்ணப்பட்டவை யடங்கலும் அவனுடைய நிர்ஹேதுக விஷயீகாரத்தாலே.

விளக்கம் – (திண்ணம் இத்யாதி) - ஸ்ரீவிபு (5-38-9) – வாஸுதேவ க்ருஹம்த்வேகம் நப்லாவயதி ஸாகர: - வாஸுதேவனுடைய மாளிகையை மட்டும் ஸமுத்ரம் அழிக்கவில்லை - என்பதற்கு ஏற்ப, ப்ரளயகாலத்தில் கூட அழியாதபடி உறுதியான மாடங்களால் சூழப்பட்ட திருவிண்ணகருக்கு வந்து நிற்கும் உபகாரனாகிய க்ருஷ்ணன். (இன் அருளே) - புண்ணியங்கள் மற்றும் பாபங்களாக நிற்கும் அவனுடைய அனைத்து விபூதிகளும் அவனுடைய க்ருபையால் தோன்றியபடி உள்ளன. பாபமும் அவனுடைய க்ருபையா என்று கேட்கலாம். இதற்கு விடை அளிக்கிறார். அவையும் அப்படியே ஆகும். சேதநன் தனது பூர்வ கர்மங்களுக்கு ஏற்றபடியே செயல்கள் செய்வதால், பாபங்களும் ஸர்வேச்வரன் க்ருபையால் உண்டானது என்றாகிறது. ஆயினும், தீமையானது அவன் க்ருபையால் ஏற்படுமோ என்றால், தீமைகளைக் காண்பித்து வெறுக்கும்படிச் செய்து, நல்ல வழியில் திருப்புகிறான். (இன் அருள்) - எந்தவிதமான காரணமும் இன்றி வெளிப்படும் க்ருபை. (கைதவமே) நான் கூறும் இவை அனைத்தும் வெறும் புகழ்ச்சிக்காக மட்டுமே கூறப்பட்டவை அல்ல. (கண்டு கொண்மின்கள்) - நீங்கள் அனைவரும் இவற்றைப் பல ப்ரமாணங்கள் மூலம் அறியலாம். அல்லது, (கைதவம்) – செய்யப்பட்டவை அனைத்தும். அதாவது செய்யப்பட்ட செயல்கள் அனைத்தும் அவனுடைய காரணம் இன்றி செய்யப்ப்ட்ட க்ருபையால் ஏற்பட்டன என்றும் கூறலாம்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்